**CC. No. 186/2022**

Date : 22.08.2025

(Solmenly affirmed before this court under act X of 1969)

PW1 : **சுதாமஞ்சரி**, பெ/வ. 57

**குறுக்கு விசாரணை:-**

3. நீங்கள் தாக்கல் செய்த வருமானவரிக்கு உண்டான 2016 முதல் 2017 வரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ( **ம.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

4. நான் தாக்கல் செய்த வருமான வரி கணக்கில் மணிபாரதிக்கு கொடுத்த பண பரிமாற்றம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், 2016 முதல் 2017 காலகட்டங்களில் கவிதா ஏஜென்சிஸ் பெயரில் தான் பண பறிமாற்றம் செய்யப்பட்டது அதன் பின்னர் அவரே அதை வேண்டாம் என்று சொல்லி மணிபாஸ்கர் புரப்பரேட்டர் சிப் என்ற கணக்கிற்கு அனுப்ப சொன்னார் 2019ல் இருந்து அந்த கணக்கில் தான் பண பரிமாற்றம் செய்யப்பட்டது.

5. கவிதா ஏஜென்சியும் மணிபாஸ்கர் புரப்பரேட்டர் சிப் என்ற கணக்குகள் என்றால் சரியல்ல. 31.03.2019ம் ஆண்டிற்கான கணக்கில் மணி பாஸ்கர் புரப்பரேட்டர் கவிதா ஏஜென்சி ஆகிய இரு வேறு கணக்குகளுக்கும் முறையே பண பறிமாற்றங்கள் நடைபெற்றுள்ளது. அவ்விரு கணக்குகளுக்கும் தனித்தனியே அனுபப்பபட்டதற்கான காரணம் என்ன என்றால், எதிரியே

அவ்வாறு கேட்டுக்கொண்டதால் தான் அவ்வாறு அனுப்பப்பட்டது. அவ்வாறு அவர் கேட்கவில்லை வழக்கிற்க்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. 2021 ஏப்ரல் முதல் எதிரி எந்த ஒரு பரிவர்த்தனையும் கிடையாது என்றால் சரிதான். ஆனால் பேமண்ட் கொடுத்துள்ளார். 23.09.2021 அன்று 19 சிலிண்டர்களில் 10 சிலிண்டர் காலி சிலிண்டர்களை கொடுத்து விட்டு மீதி 9 சிலிண்டர்களை 1 மாதத்தில் கொடுத்துவிடுவதாக சொன்னால் இருக்கலாம். மீதி இருந்த 9 காலி சிலிண்டர்களை டிசம்பர் மாதம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 25.01.2022 அன்று காசோலையை எதிரி எனக்கு கொடுத்தார்.

7. நீங்கள் தாக்கல் செய்த வருமானவரி கணக்கில் 13 லட்சம் ரூபய்க்கு கணக்கு காட்டியுள்ளேனா என்றால், உள்ளது. நீங்கள் தாக்கல் செய்த வருமானவரி கணக்கில் 13 லட்சம் ரூபாய்க்கு கணக்கு காட்டவில்லை என்றால் சரியல்ல.

8. டிசம்பர் மாதம் 2020 அன்று 64,444 ரூபாய்க்கு தாங்களிடம் பரிவர்த்தனை செய்வதற்காக 24.12.2020 தேதி குறிப்பிடப்படாமல் 30,000 ஆயிரம் ராஜேஷ் கண்ணா அவர்களிடம் காசோலையை கொடுத்தார் என்றால் சரியல்ல.

9. 25.01.2022 அன்று நான் காசோலையை வசூலுக்கு சமர்ப்பித்தேன். 28.01.2022 அன்று வழக்கறிஞர் அறிப்பு நான் அனுப்பினேன். அதற்க்கு அவர் 14.02.2022 அன்று பதில் அறிவிப்பு அனுப்பினார்.

10. எதிரி கொடுத்த பெயரில் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். அதில் முன்னுக்கு பின் முரனாக நான் சொன்னதாக மாதவரம் காவல் நிலையத்தில் இருந்து இந்நீதிமன்றத்திற்கு அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11. என்னிடம் காட்டப்படும் காசோலையில் உள்ள அனைத்தும் பூர்த்திசெய்து தான் என்னிடம் கொடுக்கப்பட்டது. அதில் உள்ள தொகையை எதிரி தான் பூர்த்தி செய்து கொடுதாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது ஆனால் என்னிடம் கொடுத்த போது அனைத்து பூர்த்தி செய்து தான் இருந்தது.

12. 2020ல் கொடுத்த 30, 000 ஆயிரத்துக்கு கொடுத்த காசோலையை கொரானா காலம் என்பதால் தேதி குறிப்பிடாமல் கொடுத்திருந்தார். எதிரிக்கு எழுத படிக்க தெரியாது என்பதனை பயன்படுத்தி தொகையை மாற்றி நானே அந்த காசோலையை வங்கியில் வசூலித்து வைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல.

13. காசோலை தொகையை பூர்த்தி செய்யும் காலத்தில் 30,000 ஆயிரத்து முன்பு 1 என்று ஒட்டி போடப்பட்டுள்ளது என்றால் அப்படித்தான் உள்ளது. 30,000 ஆயிரத்துக்கு உள்ள 0க்கும் கடையில் உள்ள 0க்கும் இங்கு வித்தியாசம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 30,000 ஆயிரிம் என்ற தொகையை 13 லட்சம் என்று நான் திருத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

14. புகாரில், அறிவிப்பில், பிரமான வாக்கு மூலத்தில் 20 காலி சிலிண்டருக்கான தொகை தான் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். 20 காலிசிலிண்டரையும் 2020ல் தங்களிடம் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல.

15. 2020ல் 30,000 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு காசோலையும் 64,444க்கும் இரண்டு காசோலைகள் எதிரி கொடுத்தார் என்றால் சரியல்ல. அதில் 64,444 க்கு RTGS மூலம் தங்களுக்கு பணத்தை எதிரி கொடுத்துவிட்டார் என்றால் அவ்வாறு கொடுத்திருந்தால் என்னுடைய Statementல் அது இருக்கும்.

16.எதிரியை பழிவாங்கும் நோக்கத்தில் இந்த காசோலையை தவறாக பயன்படுத்தி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வருமானவரி கணக்கை தாக்கல் செய்வதற்க்கான அனைத்து ஆடிட்டரிடம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் கொடுக்கப்பட்டுள்ளது. அவைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் Statement தான் தாக்கல் செய்து

விட்டேன். உள்ளது கொடுக்க முடியும். அதில் தேதி வாரியாக பரிவர்த்தனைகளை கொடுக்க முடியுமா என்றால் முடியும். அவைகளை உங்களால் அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2025.08.22 12:53:21 +0530

நீதித்துறை நடுவர்,
திருவொற்றியூர்